**தலைப்பு 257 - களுத்துறை மாவட்ட செயலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

களுத்துறை மாவட்ட செயலகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் களுத்துறை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2019 மே 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான களுத்துறை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்ட செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.
- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

### 1.5 ஏனைய சட்ட மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவு மற்றும் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என அறிவிக்க முடியாதிருந்தது.

(ஆ) களுத்துறை மாவட்ட செயலகத்தினால் முன்னைய ஆண்டிற்கு உரியதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.6.1 சுற்றறிக்கைகளுடன் நிதிக்கூற்றுக்கள் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட கருத்துரைகள் |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தின் நிதியல்லாச் சொத்துக்களை அறிக்கையிடும் போது அந்த சொத்துக்களுடன் தொடர்புடைய பிரதான பேரேட்டுடன் தனித்தனியான சொத்துப் பெறுமதிகளை பரீட்சிப்பதற்கு தொடர்புடைய சொத்துப் பதிவேடுகள் பேணப்பட்டிருக்காமை காரணமாக, 2018 சனவரி 01 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட சொத்து மீதிகளின் துல்லியதன்மையை மெய்மையாய்வு செய்வது சாத்தியமற்றதாகக் காணப்பட்டது. | நிதியல்லாச் சொத்துக்களை அறிக்கையிடும் போது அந்த சொத்துக்களுடன் தொடர்புடைய பிரதான பேரேட்டு மீதியுடன் தனிப்பட்ட மீதியை பரீட்சிப்பதுடன் அந்த சொத்துக்கள் 2018 நவம்பர் 28 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.3 ஆம் பிரிவின் பிரகாரம் இணங்குகின்றதான என பரீட்சிக்கப்பட வேண்டியதுடன், ஏதேனும், இணக்கமற்ற மீதிகள் காணப்படுமானால், அந்த மீதி இனங்காணப்படும் வரை நாளேட்டுப் பதிவுகள் மூலம் பிரதான பேரேட்டு மீதி அந்த தொகையினால் திருத்தப்படல் வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்க வில்லை. |

### 1.6.2 வைப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட கருத்துரைகள் |
| --- | --- | --- |
| இரண்டு வருடங்களுக்கும் அதிகமாகக் காணப்படும் ரூபா 26,762,340 தொகையான வைப்புக்கள் மற்றும் 10 வருடங்களுக்கும் அதிகமாகக் காணப்படும் ரூபா 5,635,723 தொகையான வைப்புக்கள் தொடர்பில் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் தீர்ப்பனவுசெய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. |

### 1.6.3 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

மாவட்ட செயலகத்தினால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சில ஆவணங்கள் பேணப்பட்டிருக்காததுடன் சில ஆவணங்கள் முறையாகப் பேணப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வுப் பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட கருத்துரைகள் |
| --- | --- | --- |
| **(அ) நிலையான சொத்துக்கள் பதிவேடு** | | |
| 1978 திசெம்பர் 19 இன் 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணம் 502(2) மற்றும் அதன் 11 ஆம் பிற்சேர்க்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிக்க வில்லை. | 1978 திசெம்பர் 19 இன் 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 502(2) மற்றும் அதன் 11 ஆம் பிற்சேர்க்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்படல் வேண்டும். | CIGAS நிகழ்ச்சித்திட்டத்தில் நிலையான சொத்து தொகுதியொன்று தயாரிக்கப்பட்டதிலிருந்து இனிமேலும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டை பேணுவதற்கான தேவை காணப்படவில்லை. |
| **(ஆ) மின்னியல் உபகரணத்தின் பதிவேடு** | | |
| நிதிப்பிரமாணம் 454(2) இன் பிரகாரம் மின்னியல் உபகரண பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | அரச கட்டிடங்களில் காணப்படும் அனைத்து மின்னியல் உதிரிப்பாகங்கள் | CIGAS நிகழ்ச்சித்திட்டத்தில் நிலையான சொத்து தொகுதியொன்று |

| | | |
|---|---|---|
| | மற்றும் உபகரணங்களை உள்ளடக்கும் பொருட்டு நிதிப்பிரமாணம் 454(2) இன் பிரகாரம் இருப்புப் புத்தகமொன்று பேணப்படல் வேண்டும். | தயாரிக்கப்பட்டதிலிருந்து இனிமேலும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டை பேணுவதற்கான தேவை காணப்படவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட கருத்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான கையிலுள்ள பட்டியல்களின் பெறுமதியை மிகைத்து ரூபா 987.03 மில்லியன் தொகையான கட்டுநிதிக்கான வேண்டுகோள்கள் மேற்கொள்ளப்பட்டமையின் காரணமாக, மதிப்பீடு மற்றும் ஒதுக்கீட்டு முகாமைத்துவம் திருப்திகரமான மட்டமொன்றில் காணப்படவில்லை. | மதிப்பீடுகளின் தயாரிப்பு சாத்தியமானதாகவும் துல்லியமானதாகவும் காணப்படுவதுடன் நிதிப் பிரமாணம் 50 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் திட்டமிடப்படல் வேண்டும். | தலைப்பு 257 மற்றும் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் 47 திணைக்கள செலவின விடயங்களுக்கான கட்டுநிதிகளுக்காக அது விண்ணப்பிக்கப்பட்டது. எவ்வாறாயினும், எதிர்வரும் ஆண்டுகளில் சாத்தியமான வகையில் இந்த நிலைமையை இழிவளவாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

### 2.2 ஏனைய அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளினைப் பயன்படுத்துதல்

2017 ஆம் ஆண்டில் 12 பிரதேச செயலகப் பிரிவுகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு, நிலச்சரிவுகள் மற்றும் நிலச்சரிவுகளின் உயர் இடர் காரணமாக குடி வெளியேற்றத்திற்காக இனங்காணப்பட்டிருந்த 1,191 குடும்பங்களில் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் 699 குடும்பங்களின் மீள்குடியேற்றத்திற்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 624.39 மில்லியன் செலவினம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) மீள்குடியேற்ற செயற்பாடுகளின் ஆரம்பிப்பு தொடர்பில் 1,191 | மீதமாகவுள்ள 492 குடும்பங்களை விரைவாக | 2018 யூன் 31 இல் உள்ளவாறு மீள்குடியேற்றத்திற்காக |

| | | | |
|---|---|---|---|
| | குடும்பங்களில் 699 குடும்பங்கள் மாத்திரம் மீள்குடியேற்றத்திற்காக இனங்காணப்பட்டிருந்தது. | மீள்குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இனங்காணப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை 1,444 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றில், 1,159 குடும்பங்கள் ஒப்புதல் வழங்கியிருந்தது. இதுவரை அவற்றில் 462 குடும்பங்களை மீள்குடியமர்த்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | முதலில் வெள்ளப்பெருக்கு மூலம் முழுமையாக சேதமடைந்த மற்றும் நிலச் சரிவுகள் மூலம் முற்றிலும் சேதமடைந்த 136 வீடுகளை நிர்மாணிப்பதற்குப் பதிலாக, நிலச்சரிவு இடர் காணப்படும் பிரதேசங்களிலுள்ள வீடுகள் உள்ளடங்கலாக ஒரே நேரத்தில் அனைத்து வீடுகளையும் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. | வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவுகள் மூலம் முழுமையாக சேதமடைந்த வீடுகளினை கட்டுவதற்குரிய சாத்தியத்தை கண்டறிதல். | விளக்கங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது ஒவ்வொருவர்க்கும் ரூபா 200,000 முதல் தவணைப் பணமாக ரூபா 5.2 மில்லியன் தொகையொன்று பயனடைந்த 26 குடும்பங்களுக்கான அரசாங்க ஒதுக்கீடுகளிலிருந்தான வீடுகளின் நிர்மாணம் தொடர்பில் அரச காணிகள் மற்றும் காணிகள் பயனாளிகளுக்குச் சொந்தமானதாகக் காணப்பட்ட அதேவேளை இதுவரை நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. | முற்பணங்களை அளிக்கும் அதேவேளை வேலையின் ஆரம்பித்தலுக்காக குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்று அளிக்கப்படுவதுடன் அவை அடிக்கடி கண்காணிக்கப்படல் வேண்டும். | நிர்மாணத்தை ஆரம்பிக்குமாறு பயனாளிகள் வேண்டிக்கொண்ட போதிலும், உடல் நலக்குறைவு மற்றும் அவற்றை கையாள்வதற்கு எவரும் காணப்படவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சில நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றன. |
| (ஈ) | அரச காணியொன்று, பயனாளியின் காணி மற்றும் அரச நிதி உதவியிலிருந்து | வீடுகளின் நிர்மாண வேலைகள் முறையாக மேற்பார்வை செய்யப்படல் வேண்டும். | பயனாளிகள் அழைக்கப்பட்டு எழுத்து மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வனவு செய்யப்பட்ட காணியொன்றில், அரச நிதி உதவியின் மூலம் நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட ரூபா 121.2 மில்லியன் தொகையான பணத்தில், ரூபா 33.4 மில்லியன் தொகையொன்று ஏற்பட்டதன் மூலம் 167 வீடுகளின் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், இதுவரை அடித்தளத்திற்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்தது. | | இது தாமதங்கள் மற்றும் பயனாளிகளின் பலவீனங்கள் மூலம் ஏற்பட்டிருந்ததென அறிவிக்கப்பட்டது. |
| (உ) | உயர் இடரைக் கொண்ட பிரதேசங்களில் காணப்படும் வீடுகளினை மீள்குடியமர்த்துவதனைக் தவிர்ப்பிதற்காக: அரசாங்கத்திற்குரிய அந்த வீடுகள் மற்றும் காணிகளை கையேற்றிராது, கையேற்கப்பட்ட காணிகளில் 20 பேர்ச்சஸை விட அதிகமான வீடுகள் மற்றும் காணிகள் தொடர்பில் மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கான இழப்பீட்டினைச் செலுத்தியிருக்கவில்லை. | காணி சுவீகரிப்பு மற்றும் இழப்பீட்டின் செலுத்துகை 2017 யூலை 05 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். | காணி சுவீகரிப்பு நடைமுறை தயாரிக்கப் படாததிலிருந்து அனர்த்த முகாமைத்துவ அமைச்சுக்கு இது தொடர்பில் அறிவிக்கப் பட்டிருக்கின்றது. |
| (ஊ) | அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் வழிகாட்டல்களின் பிரதேச செயலகங்களினால் மீள்குடியமர்த்தலுக்காக காணிகளை இனங்காணும் போது போக்குவரத்து, வர்த்தகம், நீர், மின்சாரம் மற்றும் வீதியை அணுகுதல் போன்ற பொது நோக்கங்களுக்காக இலகுவாக அணுகக்கூடியதாகக் காணப்படும் காணிகளை தெரிவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் வழிகாட்டல்களின் பிரகாரம் பிரதேச செயலகங்கள் செயற்படல் வேண்டும். | மீள்குடியமர்த்தலுக்காக களுத்துரை மாவட்டத்தில் எவ்வித பொருத்தமான காணிகளும் காணப்படவில்லை. மீள்குடியமர்த்தலுக்காக தெரிவு செய்யப்பட்ட காணிகளில் அடிப்படை வசதிகள் அமைக்கப்படுகின்றன. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட நலன்களினைப் பெற்றுக்கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 2003 ஆம் ஆண்டு மற்றும் 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது பாலிந்நுவர பிரதேச செயலகத்திலுள்ள மேற்கு கிராம சேவையாளர் பிரிவின் 836-E பெலந்தா - இல் அமைந்துள்ள போர் வீரர்களுக்கு 181 காணித்துண்டுகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், 20 காணித்துண்டுகளில் மாத்திரம் போர் வீரர்கள் வசிக்கின்றனர். | தேவைப்படும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதுடன் போர் வீரர்களை மீள்குடியமர்த்துவதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்ளல் | நான்கு காணித் துண்டுகள் வியாபார நோக்கங்களுக்காக ஏனையவர்களுக்கு கையளிக்கப் பட்டிருக்கின்றன. இதன் உட்கட்டமைப்பு வசதிகள் ரணவிரு சேவா அதிகார சபையினால் வழங்கப்பட வேண்டியதிலிருந்து, அவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதேவேளை, இரண்டு காணித்துண்டுகள் ஏனையோர்க்கு கையளிக்கப் பட்டிருக்கின்றதுடன் மற்றுமொரு காணித்துண்டு அத்தை மகனொருவர்க்கு வழங்கப்பட்டிருக்கின்றது. |
| (ஆ) 2010 ஆம் ஆண்டின் போது இங்கிரிய பிரதேச செயலகத்தின் 620G மகா இங்கிரிய கிராம சேவையாளர் பிரிவுக்குச் சொந்தமான இமாகிரி காணியிலிருந்து 22 துண்டுகள், அன்டுருகல தோட்டத்தின் 620 நில்மலாகம கிராம சேவையாளர் பிரிவிலிருந்து 26 காணித்துண்டுகளாக 48 காணித்துண்டுகள் போர்வீரர்களுக்கு அளிக்கப்பட்டன. இந்தக் காணித்துண்டுகளில், 13 காணித் துண்டுகளில் நபர்கள் ஏற்கனவே வசிக்கின்றதுடன் உறுதிப்பத்திரம் இதுவரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | விரைவாக உறுதிப் பத்திரத்தை வழங்குவது மற்றும் போர் வீரர்களை குடியமர்த்துவது அவசியமாகக் காணப்படுகின்றது. | பயனாளிகளுக்கான உறுதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்வதற்கு காணிகள் ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட வேண்டிய ஆவணங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அபிவிருத்தி செய்யப்படாத காணிகளின் குடியிருப்பாளர்கள் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் குடியமர்த்தப்பட வில்லையாயின், இந்தக் காணிகளை ஏனைய பொருத்தமான பயனாளிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| (இ) அஹலவத்த பிரதேச செயலகத்தின் 829B கெகுலாந்தல கிராம சேவையாளர் பிரிவுக்குச் சொந்தமான பிம்புறவத்த கபுஹென காணியிலிருந்து 81 காணித்துண்டுகள் 2009 திசெம்பர் 08 இல் போர் வீரர்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், 3 குடும்பங்கள் மாத்திரம் தற்போது அங்கு வசிக்கின்றனர். இந்தக் காணிகளில் சில இதுவரை ஏற்கனவே விற்பனை செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | காணிகளில் போர் வீரர்களினை குடியமர்த்துவதற்கு மற்றும் விற்பனை செய்ய முடியாத கட்டுப்பாட்டு முறைமையொன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | அங்கு எவ்வித உட்கட்டமைப்பு வசதிகளும் காணப்படாமையின் காரணமாக அங்கு குடியமர்த்தல்கள் காணப்படவில்லை. உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை எதிர்காலத்தில் அமுல்படுத்துதவற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. வசிக்காத போர் வீரர்களின் காணிகளை, புதிதாக வேண்டுகோள்விடுத்த போர் வீரர்களுக்கு கையளிப்பதற்குகூட எதிர்பார்க்கப்படுகின்றது. |

### 3.2 செயற்திட்டங்களை பூர்த்தியாக்காது கைவிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட கருத்துரைகள் |
|---|---|---|
| 2017 பெப்பரவரி 13 இல் ரூபா 108.48 மில்லியன் கிரயமொன்றில் ஆரம்பிக்கப்பட்டிருந்த களுத்துறை பிரதேச செயலகத்திற்கான புதிய நான்கு மாடிக் கட்டிடமொன்றின் நிர்மாணம் 2018 மே 20 அளவில் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. வேலை நிறுத்தப்பட்டுக் காணப்பட்டதுடன் வேலையின் 22.5 சதவீதம் பூர்த்தியடைந்து காணப்பட்டதுடன் இந்த நோக்கத்திற்காக ரூபா 42.9 மில்லியன் தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. | ஒப்பந்தத்தை அளிக்கும் போது ஒப்பந்தக்காரர்களினால் முறையான மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் மதிப்பீடுகளினை மேற்கொள்ளும்போது சாத்தியவளக் கற்கையொன்று நடாத்தப்படல் வேண்டும். | ஒப்பந்தம் செய்த நிறுவனத்தின் நிதிசார் கஷ்ட நிலைமை காரணமாக ஒப்பந்த வேலை நிறுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், விலைமனுக்களை மீள அழைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. |

### 3.3 செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதில் தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட கருத்துரை |
|---|---|---|
| 2010 தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை அஹலவத்த பிரதேச செயலகத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த 04 செயற்திட்டங்கள் 2018 திசெம்பர் 31 வரையிலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்காததுடன் இது தொடர்பில் ரூபா 8.53 மில்லியன் தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. | நிர்மாண வேலைகளை விரைவாகப் பூர்த்தி செய்வதற்கு மற்றும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | மிகுதியாகவுள்ள கட்டத்தின் அமுல்படுத்தலுக்கான மதிப்பீடுகளினை தயாரிப்பதற்கு அவ்மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அறிவுறுத்தப் பட்டிருக்கின்றதுடன் சிங்கராஜ ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2018 இற்கான அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக அனுப்பப்பட்டிருக்கின்றது. |

### 3.4 பெறுகைகள்

(அ) 2018 ஆம் ஆண்டில் ரூபா 5.76 மில்லியன் பெறுமதியில் மதுகமயில் அமைந்துள்ள மல்வத்துவகந்த பாலத்தின் நிர்மாணத்திற்காக தெரிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரரின் தகைமைகள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட கருத்துரைகள் |
|---|---|---|
| (i) ஒப்பந்தக்காரரை தெரிவு செய்வதற்கு நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையிடம் பெறப்பட்ட (சீஐடீஏ) C6 அல்லது அதைவிட உயர்தரம் காணப்படாமை. | 4.2 ஆம் கேள்விமனு ஆவணத்தின் (Bidding Document) பிரகாரம் ஒப்பந்தகாரர் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (சீஐடீஏ) C6 அல்லது உயர்தரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். | பாலங்களின் நிர்மாணத்தில் உயர் தொழில்நுட்பமொன்று பயன்படுத்தப்படாததிலிருந்து அதேவேளை, இந்த செயற்திட்டத்திற்கான சிறிய பாலங்களின் நிர்மாணத்திற்கான பெறுகை நடவடிக்கைகள் திறந்த நிர்மாண தரங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | கேள்விமனு ஆவணங்களின் உறுப்புரையின் பிரகாரம் இந்த பணிக்காக சிவில் பொறியியளாளரொருவர் காணப்பட வேண்டிய போதிலும், சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் பிரகாரம் நிறுவனத்தில் மொரட்டுவ பல்கலைக்கழகத்திலிருந்து டிப்ளோமா சான்றுப்பத்திர மொன்றுடனான நபரொருவர் மாத்திரம் பணியில் அமர்த்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 4.4 ஆம் கேள்விமனு ஆவணத்தின் (Bidding Document) பிரகாரம் சிவில் பொறியியலாளரொருவர் (B.Sc) காணப்படல் வேண்டும். | ஒப்பந்தக் கம்பனியில் பணிபுரியும் பொறியியலாளர்கள் 1986 ஆம் ஆண்டிலிருந்து RDA இல் பணிபுரிகின்றதுடன் அத்துடன் 2013 ஆம் ஆண்டிலிருந்து மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையிலும்கூட பணிபுரிந்து கொண்டிருக்கின்றமையால், அவர் அனுபவமுடையவராகக் காணப்படுகின்றார். |
| (iii) | சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் பிரகாரம், ஒப்பந்தகாரர் பாலங்களின் நிர்மாணித்தலில் அனுபவமுடையவராகக் காணப்படவில்லை. | 4.4 ஆம் கேள்விமனு ஆவணத்தின் (Bidding Document) பிரகாரம் கடந்த 10 ஆண்டுகளுக்குள் பாலங்களின் நிர்மாணித்தல் ஒப்பந்தக்காரர் அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். | பாலச் செயற்திட்டம் உலக வங்கி செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப் படுகின்றதுடன் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தயாக்கப்படல் வேண்டும். |
| (iv) | சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் பிரகாரம் கம்பனிகள் பதிவாளரினால் விநியோகிக்கப்பட்ட சான்றுப்பத்திரமொன்று காணப்படாமை. | ரூபா 05 பில்லியனை விஞ்சுகின்ற செயற்திட்டங்களுக்காக 1987 இன் 43 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் 8 ஆம் பந்தியின் கீழ் விநியோகிக்கப்பட்ட சான்றுப்பத்திரமொன்றை கம்பனிகள் பதிவாளர் சமர்ப்பிப்பார். | சான்றுபத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டிராததிலிருந்து அவ்வாறான சான்றுப்பத்திரமொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

(ஆ) களுத்துறையிலுள்ள திருச்சிலுவை ஆலயத்தின் மீள்நிர்மாணம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட கருத்துரைகள் |
|---|---|---|
| களுத்துறையிலுள்ள திருச்சிலுவை ஆலயத்தின் மீள் நிர்மாணத்திற்காக 2018 ஆம் ஆண்டில் மத்திய கலாச்சார நிதியத்திடமிருந்து பெறப்பட்ட ரூபா 1.44 மில்லியன் விடுவிப்பு தொடர்பில் கேள்வி நடைமுறை அல்லது பெறுகை நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | பொது நிதியைப் பயன்படுத்துகையில் பெறுகை வழிகாட்டல்களின் பெறுகை பிரகாரம் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | 2018 ஒக்தோபர் 18 ஆந் திகதிய மத்திய கலாசார நிதியத்தின் (சமய மற்றும் கலை விவகாரம்) பணிப்பாளரின் D/CO/01/08 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் கேள்வி நடைமுறை / பெறுகை நடைமுறையில் செலுத்துவதற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) களுத்துறை மாவட்டத்தில் கிராம சேவையாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு இணைக்கப்பட்டுள்ள சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உத்தியாளர்களுக்கு வசதியான அலுவலகங்களினை வழங்கும் நோக்கத்துடன் 2017 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட 40 நில செவன அலுவலகங்களில், ரூபா 70 மில்லியன் கிரயமொன்றில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 35 நில செவன அலுவலகங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அலுவலகர்களுக்கு நில செவன அலுவலகங்களினை முழுமையாக உடனடியாக பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகளினை மேற்கொள்ளல். | 40 நில செவன அலுவலகங்களில் 5 திறக்கப்பட்டிருக்கின்றன. மீதமாகவுள்ள 35 அலுவலகங்களினைத் திறப்பதற்கு தொகுதி அமைப்பாளர் களிடமிருந்து திகதிகளைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. |
| (ஆ) வலல்லவிட்ட பிரதேச செயலக பிரதேசத்தில் ரூபா 8.73 மில்லியன் கிரயமொன்றில் 2014 தொடக்கம் 2018 ஆம் ஆண்டு | நிர்மாணத்தின் பூர்த்தியின் பின்னர் பிரதேச சபைக்கு மயானத்தைக் | மாகாண சபையின் நிதிகளின் கீழ் மயானத்தின் பர்னர் (burner) மற்றும் |

| | | |
|---|---|---|
| வரை நிர்மாணத்தின் கீழ் காணப்பட்ட இத்தாபன மயானத்தின் நிர்மாணத்தை ஆண்டில் பூர்த்தியாக்குவதற்கு மற்றும் பயன்படுத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கையளிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | புகைப்போக்கியின் நிர்மாணத்திற்காக வல்லல்விட பிரதேச செயலகத்தினால் பெறுகை வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (இ) பலின்டநுவர பிரதேச செயலகத்தில் ரூபா 8.78 மில்லியன் கிரயமொன்றில் கட்டப்பட்ட சுரக்ஸா நிலையத்தின் பராமரிப்பு வேலைகள், 2017 ஆம் ஆண்டில் இடம்பெற்ற அனர்த்தமொன்றின் நிகழ்வுக்கு பயன்படுத்தக்கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பராமரிப்பு வேலைகளுக்கான முறையான பொறிமுறையொன்றை தயாரித்து அதனை அமுல்படுத்தல். | பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்களின் அலுவலகங்கள் பேணப்படுகின்றதுடன் தொழில்சார் பயிற்சி நிலையமொன்றை திறப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. |

## 3.6 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட கருத்துரைகள் |
|---|---|---|
| நான்கு பிரதேச செயலகங்களில் ரூபா 2.62 மில்லியன் தொகையான சேதங்களை தீர்ப்பனவுசெய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேசங்களை இனங்காண்பதற்கு மற்றும் அவற்றை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | அவற்றை புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. |

## 3.7 முகாமைத்துவ பலவீனங்கள்

களுத்துறை மாவட்டத்தின் அரச காணிகளின் பரீட்சிப்பின் போது, பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட கருத்துரைகள் |
|---|---|---|
| களுத்துறை மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலகங்களில் அங்கீகரிக்கப்படாத ஆக்கிரமிப்புக்களுக்காக இனங்காணப்பட்டிருந்த 11,225 காணித்துண்டுகளில், மீளாய்வாண்டின் போது 73 காணிகள் கச்சேரியின் | விரைவில் அங்கீகரிக்கப்படாத காணிகளின் பிரமாணங்களினைப் பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | இந்த தகவல் துல்லியமானதாகக் காணப்படுகின்றது என மேலதிக மாவட்ட செயலாளர் (காணி) நிரூபித்திருந்தார். |

கட்டுப்பாட்டில் காணப்பட்டதுடன் 759 காணித்துண்டுகள் மாத்திரம் ஒழுங்குபடுத்தப்பட்டன.

### 3.8 சொத்துக்களின் பயன்படுத்துகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட கருத்துரைகள் |
|---|---|---|
| 1987 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளுக்கிடையில் செயற்திட்டங்களினை ஆரம்பிப்பதற்காக பல்வேறு அரசாங்க முகவர்களினால் 05 பிரதேச செயலக பிரதேசங்களில் 460.2961 ஹெக்டேயர் பரப்புடைய காணி கொள்வனவுசெய்யப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டங்கள் இதுவரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | காணிகளைக் கொள்வனவு செய்வதற்கு முன்னர் செயற்திட்ட அறிக்கைகளினை தயாரிப்பதன் மூலம் ஏற்பாடுகளினை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | காணிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப் பட்டிருக்கவில்லை. |

## 4. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளினை அடைந்து கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட கருத்துரைகள் |
|---|---|---|
| 2030 ஆம் ஆண்டளவில் நிலைபேறான அபிவிருத்தியினை அடைந்து கொள்ளும் நோக்கங்களின் அடிப்படையில் பிரதேச செயலக மட்டத்தில் பிராந்திய நிலைபேறான அபிவிருத்தி திட்டங்கள் தயாரிக்கப்பட்டதன் பின்னர் களுத்துறை பிரதேச செயலகத்திற்காக பிராந்திய நிலைபேறான அபிவிருத்தி திட்டமொன்றை தயாரிப்பதற்கு 2018 ஆம் ஆண்டில் இணங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இதுவரை பிரதேச செயலக மட்டத்தில் நிலைபேறான அபிவிருத்தி திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உடனடியாக பிரதேச செயலக மட்டத்தில் நிலைபேறான அபிவிருத்தி திட்டங்கள் ஸ்தாபிக்கப்படல் வேண்டும். | திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு பிரதேச செயலாளர்கள் அறிவுறுத்தப் பட்டிருக்கின்றனர். |